பக்கங்கள் 18+2

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 13 சனிக்கிழமை 09.11.2024 | அதிர்வு 100

## இணையவழி நிதி மோசடி: 58 இலங்கையர்கள் கைது!

இணையத்தின் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 58 இலங்கையர்களைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# பகிரங்க விவாதம் நடத்த தயார்!

## சுமந்திரன் சூசகமாக இன்று கஜேந்திரகுமாருக்கு சவால்



(எஸ்.நிதர்ஷன்)

"இந்தக் கூட்டம் போன்று பல தரப்பினர்களும் கலந்து கொள்கின்ற விவாதங்களுக்கு வராமல மறைந்து ஒளிந்திருக்கும் தரப்பிற்கு பகிரங்க சவாலொன்றை விடுக்கிறேன். எவருடனும் பகிரங்க விவாதத்திற்கு நான் தயார். யாரேனும் துணிந்தால் வாருங்கள். அதனை விடுத்து ஒளிந்து, மறைந்திருந்து, பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்."

02

## 8 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவுடன் வெளிமாவட்ட நபர் ஒருவர் மன்னாரில் கைது



(வாஸ் கூஞ்ஞ)

குற்றப் புலனாய்வுப் பகுதியினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து மன்னார் நகரில் சுமார் எட்டு இலட்சம் பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு மன்னார் நகரில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் திருகோணமலைப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் இணைந்து மன்னார் நகரில் மேற்கொண்ட சோதனையில் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவர்

04




# முதலாம் பக்கத் தொடர்ச்சி




**பகிரங்க விவாதம்...**

– இவ்வாறு தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சவால் விடுத்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயர் குறிப்பிடாமல் – சூசகமாக அவரைச் சுட்டி – இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் "நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்? தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன?" எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் இன்று இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் பிரதான கட்சியாக இருப்பது தமிழரசுக் கட்சிதான். அந்தக் கட்சிதான் சமஷ்டிக் கட்சி. எங்களது இந்தக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையை ஏளனம் செய்தவர்கள் எல்லாம் மனம் மாறி இப்போது எமது நிலைப்பாட்டிற்கு வந்துள்ளனர்.

ஆக, மொத்தத்தில் இங்குள்ள பல்வேறு கட்சிகளும் சமஷ்டி என்றுதானே கூறுகின்ற நிலையில் அதனை அன்று முதல் இன்றுவரை கொள்கையாக வைத்திருக்கும் தமிழரசுக் கட்சிக்கே வாக்களிக்கலாம். இதனை விடுத்து ஏன் மற்றைய கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்?

இப்போது பலரும் மாற்றம் வேண்டும், மாற்றம் வேண்டும் எனக் கூறுகின்றனர். அது எங்கள் கொள்கையில் மாற்றமில்லாது, காலத்தோடு வரும் நபர் மாற்றங்களை செய்துள்ளோம். எப்போதுமே கொள்கை மாறா – அடையாளம் மாறாத – கட்சியாக எமது கட்சி திகழ்ந்து வருகிறது.

மேலும் இப்போது ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி அநுரகுமார பலதையும் செய்வார் எனச் சொல்லியிருக்கிறார். ஆகவே அவர் சொன்னவற்றைச் செயலில் செய்து காட்ட வேண்டும்.

அதனைவிடுத்து அதற்கு மாறாக அவர் செயற்பட கூடாது. ஆனால் இப்போது அதற்கு மாறான நிலைப்பாடுகளை எடுத்து சறுக்கத் தொடங்கி இருக்கிறார். இவ்வாறு தாம் சொன்னதை தாமே செய்யாமல் இருப்பது அவருக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

சிங்கள பெரும்பான்மை வாக்குகளுடன் ஜனாதிபதி பதவிக்கு வந்த கோட்டபாய ராஜபஷ இரண்டு வருடங்களில் துரத்தப்பட்டார். அதேபோல இவருக்கும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்து ஜனாதிபதியாக்கியிருக்கிறார்கள்.

அதனால் சிங்கள பெரும்பான்மை மக்களை மீறி எதனையும் செய்ய முடியாமல், தாம் சொன்னதை மீறியே செயற்படுகிற நிலைக்கு வந்துள்ளார். ஆக கோட்டபாய போல இவரும் செயற்பட முயன்றால் இவருக்கும் எத்தனை வருடங்களோ தெரியவில்லை. ஆக மொத்தத்தில் இப்போதைய ஜனாதிபதியின் செயற்பாடுகளில் பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன.

முன்னைய நல்லாட்சி காலத்தில் அரசமைப்பு உருவாக்கத்தில் செயற்பட்ட பல விடயங்களில் எம்மோடு இணைந்து பயணித்தவர்களாக இவர்கள் இருகின்றனர். ஆகையினால் இன்று அதிகாரத்திற்கு அவர்கள் வந்துள்ளமையால் அத்தகைய செயற்பாடுகள் தொடர வேண்டுமானால், முன்னர் இதனைச் செய்தவர்களையும் உள்ளடக்கி பலமான அணியாக அல்லது கட்சியாக தமிழ் மக்கள் எங்களை அனுப்ப வேண்டும்.

அப்படி வடக்கு, கிழக்கு முழுவதும் ஒரே கட்சியாக இருக்கிற தமிழரசுக் கட்சிக்குத்தான் மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதே போன்று இம்முறையும் வழங்க வேண்டும்.

எனவே கொள்கை மாறாத – அடையாளம் மாறாத – அரசியல் மாற்றத்தை உருவாக்க வேண்டும். அப்படியாயின் இதே நிலைப்பாட்டில் பயணிக்கிற தமிழரசுக் கட்சிக்கு முழுமையான ஆதரவை தமிழ் மக்கள் வழங்க வேண்டும்.

இதேவேளை இன்னுமொரு விடயத்தை இங்கே குறிப்பிட வேண்டும். இந்தக் கூட்டம் போன்று பல தரப்பினர்களும் கலந்து கொள்கின்ற விவாதங்களுக்கு வராமல மறைந்து ஒளிந்திருக்கும் தரப்பிற்கு பகிரங்க சவாலொன்றை விடுக்கிறேன். எவருடனும் பகிரங்க விவாதத்திற்கு நான் தயார். யாரேனும் துணிந்தால் வாருங்கள். அதனை விடுத்து ஒளிந்து, மறைந்திருந்து, பொய்களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

தேர்தல் கால பிரசாரத்திற்கு இன்னும் இரண்டு நாள்கள்தான் உள்ளன. அதற்குள் பகிரங்க விவாதம் நடத்தலாம். துணிவிருந்தால் வாருங்கள்.

குறிப்பாக "எக்கிய ராஜ்ஜிய" என்று கத்திக் கொண்டு மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம். அதில் என்ன உள்ளது, அதன் வரைவிலக்கணம் என்ன என்று தெரியாமல் பொய்களை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள்.

"எக்கிய ராஜ்ஜிய" என்பதன் வரைவிலக்கணத்தை முதலில் பார்க்க வேண்டும். அது ஒற்றையாட்சி அல்ல. அதனைவிடுத்து ஒற்றையாட்சி என்று சொல்லிக் கொண்டு திரிவதில் பலனில்லை.

அதுபற்றி அந்த அரசமைப்பு ஏற்பாட்டிலேயே விளக்கம், வியாக்கியானம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. "மாகாணங்களையும், மத்திய அரசையும் கொண்ட ஆட்சி முறை" என்று தெளிவாக அதில் கூறப்பட்டிருக்கின்றது. அதைப் புரட்டி, மறைத்து அதில் "ஏக்கிய ராஜ்ஜிய" என்பது ஒற்றை ஆட்சி என்று பொய்க் கதை பேசியவர்கள் இவர்கள்.

இவ்வாறான நிலைமையில் "தேசியம்", "தேசியம்" என்ற ஒரு வார்த்தையை மந்திரம் போல சொல்லிக் கொண்டிருப்பவர்கள் எதற்கும் உண்மையை அறிந்து பேச வேண்டும்.

மேலும் வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் எனக் கூறிக் கொண்டு திரிபவர்கள் கடந்த தேர்தலில் தமக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை ஏன் கிழக்கிற்கு கொடுக்கவில்லை. அதனையும் யாழ்ப்பாணத்திலேயே வைத்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது மீளவும் இணைந்த தாயகம் பற்றி பேசுகின்றனர்.

ஆனால் எங்களது கட்சியை பொறுத்த வரையில் வடக்கு கிழக்கு முழுவதும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்காக கடந்தமுறை அம்பாறைக்கு அந்த போனஸ் ஆசனத்தை வழங்கியிருந்தோம். செய்ய வேண்டியமை செய்யாமல் வெறுமனே பொய்களை கூறி கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. – என்றார்.

# தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில்

# யாழில் மக்கள் மன்றக் கூட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மக்கள் மன்றக் கூட்டம் அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற்றது.

“நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்? தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன?“ எனும் தொனிப் பொருளில் இந்த மக்கள் மன்றம் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சுயேச்சைக் குழுவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணண், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் என்.சிறிகாந்தா ஆகியோர் அரசியல் பிரதிநிதிகளாகக் கலத்துகொண்டிருந்தனர்.

இதேபோன்று சிவில் சமூகத்தின் சார்பில் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி விக்னேஸ்வரன், சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தனர்.

மேற்படி கூட்டத்தில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள், வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



















# அனைத்து இன மக்களுக்கும் சம உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு

## ஜனாதிபதி அநுர அறிவிப்பு

"புதிய நாடாளுமன்ற கூட்டத் தொடர் ஆரம்பமாகி சுமார் மூன்று மாதங்களுக்குப் பிறகே புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணி குறித்து கவனம் செலுத்தப்படும். அனைத்து இன மக்களுக்கும் சம உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு அமையும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"எமது நாட்டில் இதுவரை இயற்றப்பட்டுள்ள அரசமைப்பு தொடர்பில் மக்களின் அனுமதி பெறப்படவில்லை. சோல்பறி அரசமைப்பு, 1972 அரசமைப்பு மற்றும் 1978 அரசமைப்பு என்பன மக்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கு விடப்படவில்லை. மக்களுக்குரிய அடிப்படை சட்டங்களே அரசமைப்பாகும். எனவே, நாம் நிச்சயம் மக்களிடம் அனுமதி கோருவோம். இது மக்களுக்குரிய ஜனநாயக உரிமையாகும்.

புதிய அரசமைப்பை இயற்றும் போது 2015 இல் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு பணியில் உள்ள யோசனைகள் கருத்திற்கொள்ளப்படும், புதிதாக யோசனைகள் உள்வாங்கப்படும், கோட்டாபய ஆட்சிகாலத்திலும் குழுவொன்று அமைக்கப்பட்டது, அது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும்.

இவை எல்லாவற்றையும் ஆராய்ந்து, சாதகமான, மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய, தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்குரிய சம உரிமையை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்திய வகையில் புதிய அரசமைப்பு முன்வைக்கப்படும்.

புதிய நாடாளுமன்றத்தில் முதல் மூன்று, நான்கு மாதங்களில் அரசமைப்பு தொடர்பில் குறைந்தளவிலேயே அவதானம் செலுத்தப்படும். பொருளாதாரம் பற்றியே கூடுதல் கவனம் செலுத்தப்படும். அதன்பிறகு அரசமைப்பு பற்றி அவதானம் செலுத்தப்படும்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இணையவழி நிதி...**

கொழும்பு, கிருலப்பனை பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதியொன்றில் வைத்து இன்று சனிக்கிழமை அதிகாலை அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றங்கள் தொடர்பான விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8 லட்சம்...**

கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சுமார் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவை மன்னார் நகர் பகுதியில் தன் வசம் வைத்துக்கொண்டு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேகநபர், அவரிடமிருந்த கேரள கஞ்சாவுடன் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.



# பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ‘வென்தேசிவத்த சுத்தா’ பொலிஸாரால் கைது!

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய “வென்தேசிவத்த சுத்தா” என்பவர் துப்பாக்கி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் களுத்துறை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.


கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், களுத்துறை, வென்தேசிவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்து மேலும் இரண்டு கூரிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் களுத்துறை, நாகொடை, பயாகலை மற்றும் வென்தேசிவத்த ஆகிய பிரதேசங்களில் பல்வேறு நபர்களிடம் துப்பாக்கி மற்றும் கூரிய ஆயுதங்களைக் காண்பித்து அவர்களை அச்சுறுத்தித் தாக்கியுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சந்தேகநபர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பயாகலை பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த நபர் ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கிச்சூட்டில் ஆண் ஒருவர் காயம்



கொழும்பு,தாமரைக் கோபுரத்துக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஆண் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர்கள் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பாதாளக் கும்பலைச் சேர்ந்த ‘பொடி லெசி’யின் சிறைக் கூண்டிலிருந்து பல பொருட்கள் மீட்பு!



பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான “பொடி லெசி“ என அழைக்கப்படும் ஜனித் மதுஷங்கவின் சிறைக் கூண்டிலிருந்து கையடக்கத் தொலைபேசி உட்பட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் பூஸா சிறைச்சாலையில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே இந்தப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, ‘பொடி லெசி’யின் சிறைக் கூண்டில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசி, சிம் அட்டை, டேட்டா கேபிள், ஹெட்செட் மற்றும் பல்வேறு தொலைபேசி உதிரிப்பாகங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேலும் தெரிவித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாற்றமும் தடுமாற்றமும்

தற்போது நடைபெறும் பொதுத் தேர்தல் பிரசாரத்தில் 'மாற்றம்' பற்றி அதிகம் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் 'மாற்றம்' பற்றிய கோரிக்கை வெற்றி பெற்று, ஓர் அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ள பின்னணியில், அதே போன்ற ஒரு மாற்றம் பொதுத் தேர்தலிலும் வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் கோரிக்கையும் வலுத்து வருகின்றன.

தமிழர் தாயகத்திலும் இத்தகையதோர் மாற்றம் பற்றி பல கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் அதிகம் பிரஸ்தாபிக்கின்றமையைக் காண்கின்றோம்.

இன்று காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'மக்கள் மன்றம்' உரையாடல் நிகழ்விலும் பேசிய பேச்சாளர்கள் பலரும் மாற்றம் பற்றிய கோரிக்கை குறித்து அதிகம் கருத்துரைத்தனர்.

அதில் பங்குபற்றிக் கருத்து வெளியிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் 'மாற்றம்' பற்றி மட்டுமல்லாமல் 'தடுமாற்றம்' பற்றியும் முக்கிய கருத்துரைத்தார்.

தெற்கில் மாற்றம் பற்றி அதிகம் பேசினாலும் தமிழர்களைப்பொறுத்தவரை அவர்களின் தேசியம் பற்றிய அபிலாசைகளில் மாற்றம் எதுவும் இல்லை என்று சுட்டிக் காட்டினார் சுமந்திரன்.

அவரது தமிழரசுக் கட்சிக்கு இந்த ஆண்டுடன் 75 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. தமிழர்களுடைய தேசத்துக்கு - தேசியத்துக்கு - அடிப்படையான 'சமஷ்டி' முறை கோரிக்கை இன்றும் தமிழ் தேசியவாதிகளின் ஒரே எதிர்பார்ப்பாகவும் வேணாவாவாகவும் மாற்றமடையாமல் ஒரே சீரில் இருப்பதைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், சமஷ்டிக் கோரிக்கை என்ற தமிழர்களின் எதிர்பார்ப்பை முன்வைத்துப் பிறந்ததுதான் தமிழரசு கட்சி என்பதையும் தெளிவு படுத்தினார். தமிழரசு கட்சி 'சமஷ்டி'க் கோரிக்கை என்ற புதிய அணுகுமுறையோடு பிறப்பெடுத்த போது, அந்த சமஷ்டிக் கோரிக்கையை மோசமாக விமர்சித்து, நையாண்டி பண்ணிய பலரும் - பலரது கட்சிகளும் - இப்போது அந்த சமஷ்டி கோரிக்கையை வரித்துக் கொண்டு விட்டன என்பதையும் சுமந்திரன் சுட்டிக் காட்டினார்.

தமிழர்களும் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அது அவர்களுடைய ஒரே அபிலாஷையான சமஷ்டியை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டதல்ல, சமஷ்டியை வலியுறுத்துவதை அடிப்படையாகக் கொண்டது என்று சுட்டிக்காட்டிய சுமந்திரன், அதன் காரணமாகத்தான் தமிழர்களின் மாற்றம் பற்றிய கோரிக்கையை 'அடையாளம் மாறாத மாற்றம்' என்று தமிழரசுக் கட்சி சுட்டுகின்றது என விளங்கப்படுத்தினார்.

2015 முதல் 2019 வரையான நல்லாட்சி அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை - அதற்கான அரசமைப்பு உருவாக்க எத்தனத்தை - அந்தச் சமயத்தில் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியும் சேர்ந்து ஆதரித்து நின்றது. அதையே தன்னுடைய ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தன் நிலைப்பாடாக அநுரகுமார திஸநாயக்க வெளிப்படுத்தியிருந்தார் என்பதைத் தெளிவுபடுத்தினார் சுமந்திரன்.

ஆனால் கடந்த பொதுத் தேர்தலில் மூன்று சதவீத வாக்குகளை மட்டும் பெற்ற தேசிய மக்கள் சக்தி, இப்போது ஜனாதிபதி தேர்தலில் 42 வீத வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. இதில் 39 வீத வாக்குகள் முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விழுந்த சிங்களப் பெருந்தேசியவாதிகளின் - பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் - வாக்கு என்றும், அந்த வாக்குகளின் மீதுதான் அநுரகுமார திஸநாயக்கவின் வெற்றி கட்டி எழுப்பப்பட்டிருப்பதால் அந்த வாக்குகளை இந்த பொதுத் தேர்தலிலும் சுருட்டி கொள்வதற்கு அவரது தரப்பு முயற்சிக்கின்றது என்றும் அவர் விளக்கினார்.

பெரும் தேசியவாதிகளைச் சமாளித்து, அவர்கள் ஜனாதிபதி தேர்தலில் தமக்களித்த வாக்குகளை தொடர்ந்து பொதுத்தேர்தலிலும் தக்க வைத்துக் கொள்வதற்காக தமிழரின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான தன்னுடைய உத்தேச நிலைப்பாட்டில் இருந்து அநுரகுமார திஸநாயக்கா தடுமாற்றம் காட்டுகின்றார் என்று விளங்கப்படுத்தினார் சுமந்திரன்.

மாற்றத்துக்கு மத்தியில் தடுமாற்றம் செய்யும் ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் கட்சியை பழைய நிலைப்பாட்டுக்கு - தேசிய இனப் பிரச்சினைக்கு 2016 - 2019 காலப் பகுதியில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு உருவாக்க முயற்சி மூலமான தீர்வு எத்தனத்துக்கு - இணங்க வைக்க வேண்டுமானால் அதற்கு தமிழர் தரப்பிலிருந்து வலுவான அணி ஒன்று நாடாளுமன்றுக்கு செல்ல வேண்டும் என்று சுமந்திரன் தெளிவுபடுத்துகிறார்.

இந்த மாற்றங்கள், தடுமாற்றங்களை புறந்தள்ளி தமிழர்கள் தங்களின் தேசியத்தையும் இருப்பையும் உரித்துக்களையும் தக்க வைப்பதற்கு தமிழ் தேசம் முழுதும் வலிமையான ஒரு கட்சியைத் தங்கள் பிரதிநிதிகளாக மக்கள் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று சுமந்திரன் கூறுகிறார்.

அதன்படி பார்த்தால் தமிழர் வாழும் மாவட்டமெங்கும் பிரதிநிதித்துவம் பெறக் கூடிய மிகப்பெரிய கட்சியாக இருப்பது தமிழரசுக் கட்சிதான். அதனோடு சேர்ந்து தமிழர்கள் பயணிப்பது காலத்தின் கட்டாயம்.




# வன்னியில் உதயராசாவுக்குப் பெருகும் ஆதரவு

(கி.வசந்தன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் தபால் பெட்டிச் சின்னத்தில் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் ப.உதயராசாவுக்கு தமது ஆதரவைத் தெரிவிப்பதாக முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான சுப்பிரமணியம் ரூபாலா தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பியுள்ளனர். அந்தவகையில் நிலையான அபிவிருத்தியுடனான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் தபால் பெட்டிச் சின்னத்தில் போட்டியிடும் உதயராசாவால் மாத்திரமே முடியும்.

அந்தவகையில் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும். அவரது வெற்றிக்காக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான நான் தொடர்ச்சியான பங்களிப்புக்களை வழங்குவதற்காக அவருக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கவுள்ளேன். ஆகவே, எனது ஆதரவாளர்கள் அவரது வெற்றிக்காக உழைக்க வேண்டும்.” – என்றார்.

இதேவேளை, முன்னதாக முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் அவருக்கு ஆதரவு தெரிவித்ததுடன் தொடர்ச்சியாக வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் ஜனநாயகத் தேசியக் கூட்டணியில் போட்டியிடும் உதயராசாவின் வெற்றிக்காக உழைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இனம் சார்ந்த பிரதிநிதித்துவத்தை தமிழர்கள் தக்க வைக்க வேண்டும்!

## தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை



(கி.வசந்தன்)

“வன்னியில் முஸ்லிம்கள் தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பார்களா? தமிழ் மக்கள் தமது இனம் சார்ந்த பிரதிநிதித்துவத்தைத் தக்க வைக்கச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.”

– இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் க.சபேசன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

”வன்னியில்தமிழ்மக்கள்இன்றுபாரிய ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாக மக்களுக்காகச் செயற்படுகின்றோம் என்று தெரிவிக்கும் எந்த அரசியல்வாதிகளும் பேச முன்வருவதில்லை.

குறிப்பாக வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 8 – 12 வீத முஸ்லிம்களும், 8 வீதமான சிங்களவர்களும் உள்ளனர். 80 வீதமானவர்கள் தமிழர்கள். இந்த நிலைமையில் இங்கு போட்டியிடுகின்ற ஐக்கிய மக்கள் சக்தி 2, 3 ஆசனங்களைப் பெறும் என்று பலரால் தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பிரதான கட்சியில் போட்டியிடும் ரிஷாத் பதியுதீன் தனது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திப் போட்டியிடுகின்றார். பல முஸ்லிம்களும் போட்டியிடுகின்றனர். அதுபோல் தேசிய மக்கள் சக்தியிலும் முஸ்லிம்கள் போட்டியிடுகின்றனர்.

இங்கு குறைந்தளவிலான வாக்குகளைக் கொண்டுள்ள முஸ்லிம் கட்சிகளுக்கு 2 ஆசனங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே, தமிழ் மக்கள் மிக அவதானமாக வாக்களிக்க வேண்டும். காலம் காலமாக ஏமாறும் ஒரு தரப்பாக நாம் இருக்கக் கூடாது.

எந்தவொரு காலத்திலும் முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களுக்கு வாக்களித்த வரலாறு இல்லை. அதுபோல் சிங்கள மக்கள் தமிழர்களுக்கு வாக்களித்த வரலாறும் இல்லை. ஆனால், தமிழ் மக்கள் முஸ்லிம்களுக்கும், சிங்கள மக்களுக்கும் வாக்களிப்பார்கள். இந்த நிலையை மக்கள் மாற்ற வேண்டும். அவ்வாறு வாக்களித்தால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் குறைந்து 3 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரும் வாய்ப்பு உள்ளது.

அத்துடன், எமது தமிழ்ப் பெண்கள் இன்று பொருளாதாரக் கஷ்டத்தால் வீதிகளில் நின்று சுவரொட்டிகளை ஒட்டுகின்றனர். ஒரு முஸ்லிம் பெண்மணி வீதியில் நின்று சுவரொட்டி ஒட்டுவதை யாரும் பார்த்திருக்கிறீர்களா?. இது மிகவும் ஒரு துன்பியலான நிகழ்வு. எமது மக்களுக்குச் சரியான ஒரு பிரதிநிதித்துவம் இல்லாமையே அதற்கான காரணம். எனவே, இம்முறை தேர்தலில் எமது மக்கள் சிந்தித்துத் தமிழ்க் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும்.

எமது கட்சியான தமிழர் விடுதலை கூட்டணி முரண்பாடுகள் எதுவும் இல்லாமல் உதயசூரியன் என்ற சின்னத்துடன் தொடர்ந்து பயணிக்கின்றது. எனவே, ஒற்றுமைக்காக உருவாக்கப்பட்ட எமது சின்னத்துக்கு மக்கள் வாக்களியுங்கள். எமது கட்சியில் இணையுமாறு பலருக்கு நாம் அழைப்பு விடுத்தோம். யாரும் வரவில்லை. நாங்கள் பதவிகளைச் சுழற்சி முறையில் வழங்குவதற்குக் கூட தயாராக இருக்கின்றோம். இன்று பல கட்சிகளுக்குத் தலைவர்கள் யார் என்பது தெரியது. ஆனால், நாங்கள் ஒற்றுமைக்காகச் செயற்படுகின்றோம்.” – என்றார்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Gunams super market super deal

**08, 09, 10/11/2024**

100 $ மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு

900g Mari Biscuit

**இலவசம்**




*Open until 10:00 PM.*

1145 Morningside Ave, Toronto, ON M1B 0A7

Contact : 416 283 9998





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இன்னிசை விருந்து!

யாழ்ப்பாணம், வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் வராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக பஞ்சபுராணம் ஓதப்பட்டது. அதனைத் தொடர்ந்து தெய்வீக இன்னிசைக் கச்சேரியை யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவன் திலக்சன் சிவராஜ மனோகரன் வழங்கினார். அதற்கு அணி சேர் கலைஞர்களாக கீபோட் - இன்னிசைக் கலைமணி நடேசு செல்வச்சந்திரன், மிருதங்கம் - நாதமணி ம.லோகேந்திரன், தபேலா - வித்துவான் ஆ.பிரபா ஆகியோர் இணைந்திருந்தனர்.

இதேவேளை ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்டவிருக்கும் பரிசளிப்பு விழாவுக்காக 42 ஆயிரம் ரூபா பெறுமதியானபரிசில்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களும் வழங்கிவைக்கப்பட்டன.

இதேவேளை, கந்தசஷ்டி காலத்தில் உபவாச விரதம் அனுஷ்டித்தோருக்கு ரூபா இரண்டு மில்லியன் ரூபா செலவில் தீர்த்தம் தயாரிப்பதற்காக பழவகைகள் வழங்கிவைக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





# மன்னார் மாவட்டத்தில் முதல்முறையாக வுஷு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் முதல்முறையாக வுஷு (Wushu) விளையாட்டு அறிமுகம் செய்யப்பட்டு மூன்று நாள் பயிற்சி முகாம் இடம்பெற்று வருகிறது.

மன்னார் பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை (08) தொடக்கம் நாளை ஞாயிற்றுக்கிழமை(10) வரை இந்தப் பயிற்சி முகாம் இடம்பெறும்.

பயிற்சி முகாமில் மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களில் இருந்தும் 50 வீர வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர்.

குறித்த விளையாட்டு நிகழ்வானது அரச அதிபரின் வழிகாட்டுதலோடு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் நிதி பங்களிப்புடன் நடைபெற்று வருகின்றது.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# எனது சேவைக்கு அங்கீகாரம் தாருங்கள்; சங்கு வேட்பாளர் பிரகாஷ் வேண்டுகோள்!

(வி.ரி.சகாதேவராஜா)

'விதைத்தவன் உறங்குகிறான். முளைக்கத் துடிக்கும் விதை, சிந்திய குருதி வெல்வது உறுதி'

கடந்த 20 வருடங்களாக மக்களோடு நின்று நான் செய்த சேவைக்கு அங்கீகாரம் தாருங்கள்.

இவ்வாறு விநாயகபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் இராஜகுமார் பிரகாஸ் வேண்டுகோள் விடுத்தார்.

கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009 தொடக்கம் வைத்தியத் துறையில் கடமையாற்றியுள்ளேன். திருக்கோவில், பாண்டிருப்பு, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் தனியார் வைத்தியசாலைகளை ஆரம்பித்து எமது இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளேன்.

அத்தோடு வன்பொருளகங்களுக்கு பொருள்களை விநியோகிக்கும் தொழிலும் செய்து வருகின்றேன். இவை அனைத்துக்கும் அப்பால் நான் அங்கம் வகிக்கின்ற அமைப்புகளாக முதலுதவி, அனர்த்த முகாமைத்துவம் போன்ற பயிற்சிகளின் வளவாளராக செயற்படுகிறேன்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகவும், அம்பாறை மாவட்ட மனித உரிமை மீறல் சிவில் சமூக செயற்பாட்டாளராகவும் அம்பாறை மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் முக்கியஸ்தராகவும், ஜனாதிபதி விருதுபெற்ற சாரணராகவும், சாரணத் தலைவராகவும் செயற்படுதல்.

தேசிய இளைஞர்சம்மேளனங்களின் முன்னாள் தலைவராகவும் இருந் துள்ளேன்.

அமைப்பினூடாக விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்காகவும், இளைஞர் கழகங்களுக்காகவும் இன்றுவரை அயராது உழைத்து வருகின்றேன்.

சிவில் சமூக செயற்பாட்டாளராகக் கடந்த 20 வருடங்களாக மக்களோடு நின்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களினூடாக காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளேன்.

பாண்டிருப்பு யூத் விளையாட்டுக் கழக உப தலைவராகவும் சொறிக்கல் முனை 'நாம் வளர' மேம்பாட்டுப் பேரவையின் ஆலோசகராகவும் இன்னும் பல அமைப்புகளிலும் செயற்பட்டு வருகின்றேன்.

உடும்பங்குலப் படுகொலை நினைவேந்தல் குழுவின் தலைவராகவும் கிழக்கு மாகாண மருத்துவ மக்கள் பேரவையின் பொதுச் செயலாளராகவும் இருந்துள்ளேன்.

பிரித்தானிய, ஐரிஸ், ஆஸ்ரேலியன், சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கங்கள் ஊடாகவும், எகட் அமைப்பினூடாகவும் இரண்டு மாவட்டங்களிலும் பல்லாயிரக்



கணக்கான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. குறிப்பாக வாகரை, வாழைச்சேனை, தலவாய், தன்னாமுனை, சுவிஸ்கிராமம், பணிச்சையடி ஓந்தாச்சிமடம், நீலாவனை, குருந்தையடி தொடர்மாடிகள், காரைதீவு, ஆலையடிவேம்பு பொத்துவில் பகுதிகளில் அமைக்கப்பட்டன.

2006 ஆம் ஆண்டு திருகோணமலை சம்பூர் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முகாம்களை அமைத்து உணவு, நிவாரணம் போன்றவற்றை ஏற்படுத்தி கொடுத்துள்ளேன்.

2010 ஆம் ஆண்டு பாரிய வெள்ளப் பெருக்கின் போது படகு மூலமாகவும், உலங்கு வானூர்தி மூலமாகவும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றி உணவு, நிவாரணம் போன்றவற்றை செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக பெற்றுக் கொடுத்துள்ளேன்.

அன்பார்ந்த என் உயிருக்கும் மேலான தமிழ் பேசும் உறவுகளே என்னை உங்களது மகனாக, அண்ணனாக, தம்பியாக நினைத்து மக்களோடு வீதியில் நின்று அரசியல் களமாடுவதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை தந்து அரசியலில் எனது கன்னி முயற்சியை வாழ்த்தி, வாக்களியுங்கள்.- என்றார்.

'விதைத்தவன் உறங்குகிறான். முளைக்கத் துடிக்கும் விதை, சிந்திய குருதி வெல்வது உறுதி '

கடந்த 20 வருடங்களாக மக்களோடு நின்று நான் செய்த சேவைக்கு அங்கீகாரம் தாருங்கள்.

இவ்வாறு விநாயகபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் இராஜகுமார் பிரகாஸ் வேண்டுகோள் விடுத்தார்.

கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்÷

2009 தொடக்கம் வைத்தியத் துறையில் கடமையாற்றியுள்ளேன். திருக்கோவில், பாண்டிருப்பு, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் தனியார் வைத்தியசாலைகளை ஆரம்பித்து எமது இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளேன்.

அத்தோடு வன்பொருளகங்களுக்கு பொருள்களை விநியோகிக்கும் தொழிலும் செய்து வருகின்றேன். இவை அனைத்துக்கும் அப்பால் நான் அங்கம் வகிக்கின்ற அமைப்புகளாக முதலுதவி, அனர்த்த முகாமைத்துவம் போன்ற பயிற்சிகளின் வளவாளராக செயற்படுகிறேன்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகவும், அம்பாறை மாவட்ட மனித உரிமை மீறல் சிவில் சமூக செயற்பாட்டாளராகவும் அம்பாறை மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் முக்கியஸ்தராகவும், ஜனாதிபதி விருதுபெற்ற சாரணராகவும், சாரணத் தலைவராகவும் செயற்படுதல்.

தேசிய இளைஞர்சம்மேளனங்களின் முன்னாள் தலைவராகவும் இருந்துள்ளேன்.

அமைப்பினூடாக விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்காகவும், இளைஞர் கழகங்களுக்காகவும் இன்று வரை அயராது உழைத்து வருகின்றேன்.

சிவில் சமூக செயற்பாட்டாளராகக் கடந்த 20 வருடங்களாக மக்களோடு நின்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களினூடாக காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளேன்.

பாண்டிருப்பு யூத் விளையாட்டுக் கழக உப தலைவராகவும் சொறிக்கல் முனை 'நாம் வளர' மேம்பாட்டுப் பேரவையின் ஆலோசகராகவும் இன்னும் பல அமைப்புகளிலும் செயற்பட்டு வருகின்றேன்.

உடும்பங்குலப் படுகொலை நினைவேந்தல் குழுவின் தலைவராகவும் கிழக்கு மாகாண மருத்துவ மக்கள் பேரவையின் பொதுச் செயலாளராகவும் இருந்துள்ளேன்.

பிரித்தானிய, ஐரிஸ், ஆஸ்ரேலியன், சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கங்கள் ஊடாகவும், எகட் அமைப்பினூடாகவும் இரண்டு மாவட்டங்களிலும் பல்லாயிரக் கணக்கான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. குறிப்பாக வாகரை, வாழைச்சேனை, தலவாய், தன்னாமுனை, சுவிஸ்கிராமம், பணிச்சையடி ஓந்தாச்சிமடம், நீலாவனை, குருந்தையடி தொடர்மாடிகள், காரைதீவு, ஆலையடிவேம்பு பொத்துவில் பகுதிகளில் அமைக்கப்பட்டன.

2006 ஆம் ஆண்டு திருகோணமலை சம்பூர் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முகாம்களை அமைத்து உணவு, நிவாரணம் போன்றவற்றை ஏற்படுத்தி கொடுத்துள்ளேன்.

2010 ஆம் ஆண்டு பாரிய வெள்ளப் பெருக்கின் போது படகு மூலமாகவும், உலங்கு வானூர்தி மூலமாகவும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றி உணவு, நிவாரணம் போன்றவற்றை செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக பெற்றுக் கொடுத்துள்ளேன்.

அன்பார்ந்த என் உயிருக்கும் மேலான தமிழ் பேசும் உறவுகளே என்னை உங்களது மகனாக, அண்ணனாக, தம்பியாக நினைத்து மக்களோடு வீதியில் நின்று அரசியல் களமாடுவதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தை தந்து அரசியலில் எனது கன்னி முயற்சியை வாழ்த்தி, வாக்களியுங்கள்.- என்றார்.





# சாதித்த மன்னார் தோட்டவெளி மாணவர் நேற்றுக் கௌரவிப்பு!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தேசிய மட்ட பாடசாலைகளுககு இடையிலான மெய்வல் லுநர் விளையாட்டுப் போட்டியில் மன்னார் மாவட்டத்தில் முதல் தடவையாக தங்கப் பதக்கம் பெற்ற பெற்ற முதல் வீராங்கனையான மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஏ.யதுர்சிக்கா, மற்றும் வடமாகாண மெய்வல்லுநர் தடகளப் போட்டியில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (08) வெள்ளிக்கிழமை காலை மன்னாரில் இடம் பெற்றது.

தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது சாதனை படைத்த மாணவ மாணவிகள் மன்னார் பிரதான பாலத்தடி யில் வைத்து கௌரவிக்கப்பட்டு வாகன பவனியாக தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதனை தொடர்ந்து பாடசாலையில் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி ஜி.டி.தேவராஜ் , மற்றும் விசேட விருந்தினர்களாக அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார், அருட்தந்தை எம்.ஜெயபாலன் அடிகளார் ஆகி யோர் கலந்து கொண்டனர்.









### இலங்கையை ராஜபக்ஷாக்கள் அழித்ததைப் போல

# வட பகுதியை அழித்தவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாது!

### தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்னாயக்கா

**(வாஸ் கூஞ்ஞ)**

டக்ளஸ் தேவானந்தா, ரிஷாட் பதியுதின் மற்றும் அவர்களது குழுவினர் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் அவர்களுக்கு அமைச்சுப் பதவியை வழங்கப் போவதில்லை. இலங்கையை ராஜபக்ஷக்கள் அழித்ததைப் போல வட பகுதியை அவர்கள் அழித்தார்கள். எனவே அவர்கள் யாரும் அமைச்சுக்குள் வர முடியாது.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்னாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

டக்ளஸ் தேவானந்தா மற்றும் ரிஷாட் ஆகியோர் பொய்ப் பிரச்சாரம் செய்கின்றனர். அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் தாங்கள் வெற்றி பெற்றதும் அமைச்சுப் பதவியை ஜனாதிபதி தங்களுக்கு வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றனர். பொய்ப் பரப்புரை செய்கின்றனர்.

அவர்கள் எவ்வாறு அப்படி நினைக்கலாம்? அவர்கள் பதவிகளில் இருந்த காலங்களிலேயே எல்லா ஊழல்களும் நடந்தேறின. அப்போது அவர்கள் என்ன செய்தார்கள்?

டக்ளஸ் தேவானந்தாவை நினைக்கையில் வெட்கமாக உள்ளது. அவர் ஜனாதிபதியைச் சந்தித்து ஒரு புகைப் படத்தை எடுத்துக் கொண்டு அதை வைத்து பொய்ப் பிரச்சாரம் செய்து ஏமாற்றுகிறார்.




பழைய ஆட்சியாளர்கள் நாட்டை அழிவுப் பாதையில் கொண்டு சென்ற போது டக்ளஸ் தேவானந்தாவும் அமைச்சுப் பதவியில் இருந்தார். அதைவிட கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் ரணிலையே ஆதரித்தார்.

தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்காதவர்கள் எவ்வாறு அமைச்சுப் பதவியை எதிர்பார்க்க முடியும்? அவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்க தேசிய மக்கள் சக்தி ஒன்றும் பைத்தியம் அல்ல.

மறுபுறம் ரிஷாட் பதியூதின், ஜனாதிபதி அநுர குமார தனது நண்பர் எனவும் தன்னுடன் தொலைபேசியில் உரையாடுபவர் என்றும் பொய் கூறுகிறார். கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் சஜித் பிரேமதாஸவையே ஆதரித்தார். ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலின் போது அவரும் அமைச்சுப் பதவியில் இருந்தார்.

நாங்கள் இப்போது கேள்விப் படுகிறோம். சுமந்திரனின் ஆதரவாளர்களும் சிறீதரனின் ஆதரவாளர்களும் மற்றும் சிறிய சுயேச்சைக் குழுக்களும் இந்த நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் சென்றவர்களும் யுத்தம் முடிந்த காலத்தில் இந்தப் பகுதிகளில் கப்பம் பெற்றவர்களும் ஏழைத் தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகளை அபகரித்தவர்களும் இப்போது சொல்கிறார்கள். நாங்கள் திசைகாட்டியை ஆதரிக்கிறோம் என்று அவர்கள் திசைகாட்டியை ஆதரிப்பதென்றால் திசைகாட்டிக்கல்லவா வாக்களித்திருக்க வேண்டும்? இலங்கையை ராஜபக்ஷக்கள் அழித்ததைப் போல வட பகுதியை அவர்கள் அழித்தார்கள் எனவே அவர்கள் யாரும் அமைச்சுக்குள் வரமுடியாது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டு மக்கள் அனைவரும் தேசிய மக்கள் சக்தியையே ஆதரிக்கிறார்கள். எங்களிடம் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என்ற பேதமில்லை. ஏழைகளின் வாழ்வை உயர்த்த வேண்டும். எல்லோருக்கும் சகவாழ்வளிக்க வேண்டும் எனவே நவம்பர் 14 இற்குப் பிறகு மக்கள் அனைவரும் இணைந்து ஒரு புதிய அரசை உருவாக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில், வன்னி மாவட்ட வேட்பாளர்கள் ரைசுதீன, கமிலஸ், ராதாகிருஷ்ணன் உட்பட கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# கிழக்கு ஆளுநர் – ஐ.நா. ஆலோசகர் திருகோணமலையில் கலந்துரையாடல்

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும், ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தின் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசகர் – பெட்றிக் மெக்கார்த்தி ஆகியோருக்கும் இடையில் வெள்ளியன்று (08) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

முதலில் ஆளுநரை வாழ்த்திய பெட்றிக் மெக்கார்த்தி, இந்த வாரம் முழுவதும் கிழக்கு மாகாணத்துக்குள் தாம் விஜயம் செய்வதாகவும், ஜனாதிபதி தேர்தலுக்குப் பிந்திய தேர்தல் காலம் மிகவும் அமைதியாக இருந்தது. தற்போதைய நாடாளுமன்ற தேர்தல் காலமும் அமைதியாக இருப்பதாகவும் ஆளுநரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், கிழக்கு மாகாணத்தில் நிலவும் காணிப் பிரச்சினை, மீள்குடியேற்றம், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பாக தாம் கவனத்தில் கொண்டுள்ளார் என்று கூறினார்.


பதிலளித்த ஆளுநர், தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தால் மக்கள் பெரிதும் கவரப்பட்டுள்ளனர். தற்போது மாகாணத்தில் மிகக்குறைந்த ளவு தேர்தல் பிரச்சினைகளே காணப்படுகின்றன என்று தூதுக்குழுவிடம் தெரிவித்தார். காணிப்பிரச்சினைகள் தொடர்பில், தேசியக் கொள்கைக்கு அமைய, திட்டமிட்டு நியாயமான முறையில் தீர்வுகளைக் காண்பதற்கு, மத்திய அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகிறார் என்றும் மூவினத்தவர்களும் வாழும் இந்தக் கிழக்கு மாகாணத்தில் இனப் பிரச்சினைகள் அல்லது தேவையற்ற அரசியல் தலையீடுகளை அடிப்படை யாக கொண்டு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படமாட்டாது எனவும் ஆளுநர் கூறினார்.

இலங்கையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான அதிகபட்ச ஆதரவை வழங்குவதற்கு ஆதரவு வழங்கி வருகிறோம். காணி ஆணைக்குழுவுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவையும், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ அமைப்பை உருவாக்கத் தேவையான தொழில்நுட்ப ஆதரவையும் வழங்குவதற்கும் நாங்கள் தற்போது பணியாற்றி வருகிறோம் என்று பெட்றிக் மெக்கார்த்தி கூறினார்.

ஜனாதிபதி மாளிகை மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைகளுக்கு அருகில் உள்ள வீதிகள் மீளத் திறந்தமை மிகவும் அரிதானது. அது அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கையை அதிகரிப் பதோடு அரசுக்கும் மக்களுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவை ஏற்படுத்தி உள்ளது என்றும் பெட்றிக் கூறினார்.

புதிய அரசின் மீது பொது மக்களுக்கான நம்பிக்கையை ஏற்படுத்துவதே அரசின் முக்கிய பணிகளில் ஒன்று. இதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று தெரிவித்த ஆளுநர், மாகாணத்தின் கல்வி, சுகாதாரம், சுற்றுலா, மக்களின் வாழ்க்கை தொடர்பிலும் விரிவாகத் தூதுக்குழுவினருடன் கலந்துரையாடினார்.





## தஞ்சை பெரிய கோயிலில் ஆறு திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவு

மாமன்னன் இராசராசசோழனின் 1039 ஆவது சதயப் பெருவிழாவை, தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை இன்றும் (09) நாளையும் (10) தஞ்சாவூர் அருள்மிகு பெருவுடையார் திருக்கோயிலில் சமய அனுட்டானங்கள் மற்றும் கலை நிகழ்வுகளுடன் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றது.

கலை நிகழ்வில், ஈழத்தை சேர்ந்த சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் நாளை (10) ஞாயிற்றுக்கிழமை சிறப்புரை யாற்றவுள்ளார்.

# இனவாத கட்சிகளை மக்கள் மெல்ல அகற்றுகின்றனர்!

## திகாமடுல்ல வேட்பாளர் வசந்த பியதிஸ்ஸ

(வடிவேல் டினேஸ் )

இனவாத கட்சிகளை மக்கள் மனதில் இருந்து மெல்ல மெல்ல அகற்றுகின்றனர் என்று தேசிய மக்கள் சக்தியில் திகாமடுல்ல மாவட்ட முதன்மை வேட்பாளர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்று (08) மாலை இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடையை கடந்த கால அரசியல் செயற்பாடுகளின் போது அரசியல் வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட வேற்றுமை எண்ணங்களை எங்கள் ஜனாதிபதி அனுரகுமாரா திசாநாயக்க வந்தவுடன் நாங்கள் அகற்றி விட்டோம் இப்போது நாட்டில் காணப்படும் அனைத்து சமூகங்களும் வேற்றுமையற்றவை.

பலம் கொண்ட இரு கட்சிகள் தற்போது வங்குரோத்து நிலையினை அடைந்து விட்டது இதற்கு மக்கள் தெளிவடைந்துள்ளமையே காரணமாக அமைக்கின்றது.

சஜித் பிரேமதாசவுக்கு என்ன நடந்தது ? ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர் கடந்த தேர்தலில் போட்டியிட்டு அவருடைய தொகுதியிலே அவர் தோல்வியடைந்துவிட்டார்.

நார்மல்ராஜபக்ஷ இன்று நேரடியாக வாக்கு கேட்க முடியாமல் தேசியபட்டியல் ஊடக நாடாளுமன்றம் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.




தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தேசிய மக்கள் சக்தியை தாய்க் கட்சியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அதே போன்று இனவாதம் பேசும் ஏனைய கட்சிகளுக்கு இப்போது என்ன நடந்துள்ளது முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அதாவுல்லாவை விட்டு வெளியே வந்து விட்டார்கள்.

திகாமடுல்லையில் பெருவாரியான மக்கள் திசை காட்டியின் பக்கமாகத் திசை திரும்பிவிட்டனர். தமிழ் மக்களும் தற்போது திசைகாட்டியின் பக்கம் ஊழல் மோசடிகளை ஒழித்து மக்களை நல்வழிப்படுத்தும் தேசிய மக்கள் சக்தியை நோக்கி வந்து கொண்டு இருக்கின்றனர்.

கொடூரமான ஆட்சியாளர்களால் தமிழ் , சிங்கள, முஸ்லிம் மக்கள் துன்பப்பட்டது போதும். எமது நாட்டை நாம் கட்டி எழுப்புவோம். எமது நாடு பல வளங்களைக் கொண்ட நாடாக இருந்தும் இருந்தும் மக்கள் வறுமைக் கோட்டின் கீழே வாழ்கின்றனர்.

எமது நாட்டு மண்ணில் இல்மனைட் இருக்கின்றது, மாணிக்கம் இருக்கின்றது, செம்புத்தாதுகள் இருக்கின்றன. இருந்த போதும் கர்ப்பிணிகளுக்கு போஷாக்கு இல்லை. வளங்கள் இருந்தும் மக்கள் வறுமை கோட்டின் கீழே வாழும் சூழல்.

மக்களை ஒவ்வொரு மட்டத்தில் ஆட்சி செய்த பிள்ளையான் , கருணா அம்மான், ஹக்கிம், அதாவுல்லா, ரணில் விக்கிரமசிங்க, மஹிந்தராஜபக்ஷ, சஜித் பிறேமதாஸ ஆகியோர் கோடீஸ்வரர்களாக வாழும் போது அவர்களுக்குப் புள்ளடியிட்ட மக்கள் இன்றும் வறுமை கோட்டின் கீழ் காணப்படுகின்றனர்.

மக்களது பொருளாதாரத்தை மேம்படுத்த , வளர்ச்சியடைச் செய்ய எம்மிடம் பலம் உள்ளது அதை விட மக்கள் செல்வாக்கு அதிகம் உண்டு.

தமிழர்கள் என்றால் அவர்கள் தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்பது கடமையா ?அதே போன்று முஸ்லிம்களாக இருந்தால் முஸ்லிம் கட்சிக்கு மாத்திரம்தான் வாக்களிக்க வேண்டும் என்ற கடமைப்பாடு உள்ளதா?

சிங்கள மக்களுக்கும் சிங்கள கட்சிக்கு மாத்திரம் தான் வாக்களிக்க வேண்டும் என்ற கோட்பாடு இல்லை எனவே மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணைய வேண்டும்.- என்றார்.

இதன்போது திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் மொரிஸ் அன்ரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் , பொது மக்களும் கலந்து கொண்டனர்.



# தனித்துவ அடையாள அரசியல் நிலை நிறுத்தப்படல் வேண்டும்!

## திகாமடுல்ல வேட்பாளர் தவம் தெரிவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யார் வெற்றி பெறுவார் யார் தோல்வியடைவார் என்பதை விடவும் சமூகம் தோற்று விடக் கூடாது. அத்தோடு சமூகத்தில் தனித்துவ அடையாள அரசியல் நிலை நிறுத்தப்பட வேண்டும். இனத்துவ அடையாள கட்சிகளும் பாதுகாக்கப்பட வேண்டியதும் காலத்தின் தேவையாக உள்ளது.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஏ.எல்.தவம் இவ்வாறு தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நேற்று முன்தினம் (07) மாலை ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்ட வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தற்கால சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றத்தின் மூலம் எல்லாவற்றையும் அழித்துவிட்டு எங்களை இன்னுமொரு பரப்புக்குள் கரைத்து விடும் அரசியலை நாம் முன்கொண்டு செல்ல முடியாது.

இப்போதிருக்கும் அரசின் கொள்கைகள் நாளை மாறலாம். அல்லது இப்போதிருக்கின்ற அரச தலைமைகள் மாற்றம் பெற முடியும், அல்லது நீண்ட காலத்துக்கு ஆட்சியாளர்களால் நிலைத்திருக்க முடியாமல் போய்விடும் என்கின்ற ஓர் சூழ்நிலை ஏற்படுகின்ற போது எமது தனித்துவத்தையும் எமது இனத்துவ அடையாளத்தையும் சிதைத்து விட்டு எம்மை முற்றாக அழித்துவிட்டு நாம் பெரும்பான்மைக் கட்சியுடன் இணைந்து பயணிப்பது என்பது ஓர் தற்கொலைக்கு சமனான விடயமாகும்.

இலங்கையில் தற்போது பத்து சதவீதமாக காணப்படும் முஸ்லிம் சமூகத்துக்குத் தொடர்சியாக கிடைத்து வருகின்ற சுமார் இருபது நாடாளுமன்ற



பிரதிநிதித்துவத்தை இழக்கும் அபாய நிலை தற்போது காணப்படுகின்றது.

ஆகையால் எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது மக்கள் தமது உரிமைகளையும் இனத்துவ அடையாளங்களையும் நன்கு சிந்தித்து அவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

எமது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்த செயற்பாடானது ஒட்டு மொத்த எமது சமூகத்துக்கும் எதிரான செயற்பாடு. அவர்கள் இக்கட்சியில் இருந்து துடைத்தெறியப்பட வேண்டும் என கடந்த 2020ஆம் ஆண்டிலிருந்து நாம் குரல் கொடுத்து வருகின்றோம்.

அதனடிப்படையில் இருபதுக்கு ஆதரவளித்த இருவரில் ஒருவருக்கு இத்தேர்தலில் களம் இறங்குவதை நாம் தடுத்திருக்கின்றோம். அதேபோல் மற்றுமொருவரை மக்கள் தீர்ப்புக்காக விட்டிருக்கின்றோம்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்னும் ஸ்தாபதனத்தையும், அதன் தளத்தையும் பயன்படுத்திக் கட்சிக்கும் மக்களுக்கும் துரோகம் இழைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீசின் செயற்பாடுகளுக்கு எதிராகவே நாம் குரல் கொடுத்தோம். வெறுமனே ஹரீஸ் என்னும் நபருக்கும் எமக்கும் எவ்வித பகையுமில்லை. அவர் பல முறை கட்சியின் தீர்மானத்துக்கும் மக்களின் எதிர்பார்ப்புக்கும் எதிராகச் செயற்பட்டிருக்கின்றார்.

இவரது செயற்பாடுகளைக் காரணம் காட்டியே நாம் இத்தேர்தலில் அவரைக் களமிறக்கவில்லை. இவ்விடயத்தை அவர் திரிவுபடுத்தி அவரை நாம் வேண்டுமென்றே பழிவாங்குவதற்காகச் செயற்பட்டதாகவும், கல்முனை பகுதி மக்கள் மத்தியில் எம்மை பிழையானவர்களாகவும், அவர் தூய்மையானவராகவும் காட்டுவதற்கு பொய்யாக முயற்சித்துள்ளார். அப்பட்டமான பொய்யை எம்மீது சுமத்துகின்றார். இதனை மக்கள் நன்கு அறிந்து கொள்வர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை நன்கு அவதானிக்கின்ற போது கல்முனைத் தொகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அதிகளவான வாக்குகளை பெறவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

இக்கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து தற்போது தேர்தலில் போட்டியிட முடியாமல் ஆக்கப்பட்ட எச்.எம்.எம்.ஹரீஸால் எமது கட்சிக்கு எவ்வித வாக்குச் சரிவும் ஏற்படப் போவதில்லை. கல்முனைத் தொகுதியில் இருக்கும் கட்சி ஆதரவாளர்கள் இந்தக் கட்சியை ஒரு போதும் புறம் தள்ளப் போவதில்லை. அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்தக் கட்சியில் இருந்து ஒதுங்கி இருந்தவர்களை நாம் தற்போது கட்சியோடு மீளவும் ஒன்று சேர்த்து வருகின்றோம். இதில் நாம் வெற்றியும் கண்டிருக்கின்றோம்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 95 ஆயிரம் வாக்குகளைப் பெறுமாக இருந்தால் எமது கட்சியின் மூலம் இரண்டு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கான முழு முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.-என்றார்.

## முசலி கஜிவத்தை பகுதியில்

# அனுமதியின்றி மரக் களஞ்சியம் நடத்தி வந்த ஒருவர் கைதானார்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சிலாவத்துறை பொலிஸ் பிரிவில் உள்ள கஜிவத்தைக் காட்டுப் பகுதியில் அனுமதியின்றி மரக் களஞ்சியம் ஒன்றை நடத்திய, குறித்த களஞ்சியத்தில் மரக்குற்றிகளை சேமித்து வைத்திருந்த கஜிவத்தை பிரதேசத்துக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தக் களஞ்சியசாலையில் இருந்து பெருந்தொகையான மரத் துண்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஏ.எஸ்.சந்திர பாலவின் பணிப்புரையின் கீழ் மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரிகளால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியான பொலிஸ் பரிசோதகர் சில்வாவின் வழிகாட்டுதலின் கீழ் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன் போது தேக்கு, முதிரை, பாலை போன்ற பல்வேறு வகை மரங்களில் வெட்டப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான சுமார் 1820 மரத் துண்டுகள் மீட்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் சந்தேக நபர் மேலதிக நடவடிக்கைக்காக சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.மேலதிக விசாரணைகளை சிலாபத்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தமிழ் தேசியம் என்ற பெயரில் திராவிடத்தை எதிர்ப்பது ஆபத்து

## சத்யராஜ் கருத்து



தமிழ் தேசியம் என்ற பெயரில் எதிர்த்து ஆரியத்திற்கு துணை போவது மிகவும் ஆபத்தானது என்று நடிகர் சத்யராஜ் கருத்து தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று 'திராவிடமே தமிழுக்கு அரண்' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சத்யராஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திராவிடத்தை ஆரியம் எதிர்க்கலாம். ஆனால், தமிழ் தேசியம் என்ற பெயரில் திராவிடத்தை எதிர்த்து ஆரியத்திற்கு துணை போவது மிகவும் ஆபத்தானது. ஆரியத்துக்கு துணை போனால் மீண்டும் சாஸ்திரம், சம்பிரதாயம், சடங்குகள் என மூடநம்பிக்கைகள் மேலோங்கும். தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ள இக்காலத்தில் நமக்கு இருமொழிக் கொள்கை தான் முக்கியம்.

தமிழ்நாட்டுக்கு வடமாநிலத்தவர் நிறைய பேர் வேலை பார்க்க வருகின்றனர். அவர்களுக்கும் திராவிடத்தை நாம் கொண்டு செல்ல வேண்டும். அவர்களுக்குப் புரிந்த மொழியில் எடுத்துரைக்க வேண்டும்.

வட மாநிலங்களில் சாதியப் பிரச்சினைகள் அதிகம். இங்கே வேலைக்கு வரும் பெரும்பாலான வட மாநிலத்தவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் இங்கே வேலை பார்க்க வருகின்றனர் என்றால், இங்கு சாதிய ஒடுக்குமுறை இல்லை, மதக் கலவரங்கள் இல்லை. நிம்மதியாக வாழலாம் என்று வருகின்றனர். இதற்கு திராவிடம் தான் காரணம் என்று புரிய வைக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் அவர்களுடைய சொந்த ஊர்களுக்குச் சென்று தமிழ்நாட்டைப் பற்றி பேசுவார்கள்.

இங்கே வட மாநிலத்தவர் சிறுசிறு வேலை நிமித்தமாக அதிகமாக வருகிறார்கள் என்றால், அதற்கு இங்குள்ளவர்கள் வேலை செய்யத் தயாராக இல்லை என்று அர்த்தமில்லை, சிறிய வேலைகளைத் தாண்டி பெரிய இடத்தில் வேலை செய்யும் சூழலில் இங்குள்ளவர்கள் உயர்ந்து இருக்கிறார்கள் என்றே அர்த்தம்." – என்றார்.

அண்மையில் த.வெ.க. முதல் மாநில மாநாட்டில் அக்கட்சியின் தலைவர் விஜய், திராவிடமும் தமிழ் தேசியமும் கொள்கை அளவில் ஒன்றே எனப் பேசியிருந்தார். அதற்கு நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் சீமான் கடும் கண்டனம் தெரிவித்தார். மேலும், திராவிடமும், தமிழ் தேசியமும் ஒன்றாக முடியாது என்று அவர் விளக்கி தொடர்ந்து பேட்டிகளை கொடுத்து வருகிறார்.

இந்நிலையில் திராவிடம் தொடர்பான நிகழ்ச்சியில் பேசிய சத்யராஜ் தமிழ் தேசியம் என்ற பெயரில் எதிர்த்து ஆரியத்திற்கு துணை போவது மிகவும் ஆபத்தானது என்று கருத்து தெரிவித்துள்ளார்.

# ஊழலை ஒழிக்க சரியான சட்ட நடவடிக்கை அவசியம்: குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வலியுறுத்தல்

"ஊழலில் ஈடுபடுபவர்கள் மீது சரியான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால், ஊழல்வாதிகள் ஊக்கம்பெற்றுவிடுவர்"

– இவ்வாறு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று தெரிவித்தார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, ஊழல்வாதிகளைக் கட்டுப்படுத்துவதில் சட்ட நடவடிக்கையின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சமூக வாழ்க்கைக்கு நம்பிக்கை என்பது அடித்தளமாக உள்ளது. சமூக ஒற்றுமைக்கும் அதுதான் அடிப்படை. அரசின் செயல்பாடுகளை மக்கள் நம்பும்போதுதான் அரசு அமைப்புக்கு அர்த்தம் கிடைக்கிறது. ஊழல் என்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டும் இல்லை, சமூக நம்பிக்கைக்கும் தடையாக உள்ளது. மக்களின் நம்பிக்கையை அது குலைக்கிறது. தாமதமான நடவடிக்கை, ஊழல்வாதிகளை ஊக்குவிக்கிறது. எனவே ஊழலுக்கு எதிரான சரியான நடவடிக்கை மிக முக்கியமானது. அதேசமயம், உள்நோக்கத் துடன் நடவடிக்கை எடுக்கக் கூடாது.

கடந்த 10 ஆண்டுகளில் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் 12 பில்லியன் டாலர் மதிப்பிலான சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்திய அரசின் கொள்கைகள் ஊழலை வேரோடு ஒழிக்கும் என்பதை உறுதியாக நம்புக்கிறேன்." – என்றார்.

# ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் கூட்டம்கூட்டமாக இறக்கும் பறவைகள்

ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் சாம்பார் ஏரியில் கடந்த மாதம் 26 ஆம் திகதியில் இருந்து பறவைகள் கூட்டம்கூட்டமாக இறந்து வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதுவரை 520 பறவைகள் செத்து மடிந்துள்ளன. இது மாநிலத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து நடந்த ஆய்வில், ஒருவித பாக்டீரியாவால் பறவைகள் பாதிக்கப்பட்டு இருப்பது கண்டறியப்பட்டது. கிளோஸ்ட்ரிடியம் போட்லினம் என்ற அந்த பாக்டீரியா தாக்கிய பறவைகளின் இறகு மற்றும் கால்கள் செயலிழந்து உயிரிழந்து வருகின்றன.

நோய் வாய்ப்பட்டுள்ள பறவைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன், பாக்டீரியா தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.



# பாகிஸ்தான் ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்பு; 20 பேர் பலி!

பாகிஸ்தானில் உள்ள குவெட்டா ரயில் நிலையத்தில் இன்று காலை பயங்கர குண்டு வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் சுமார் 20 பேர் உயிரிழந்ததுடன், 30 பேர் காயம் அடைந்தனர்.

ரயில் ஒன்று நடைமேடைக்கு வருவதற்குச் சற்று முன்னதாக குண்டு வெடிப்பு ஏற்பட்டததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குண்டு வெடிப்பு ஏற்பட்ட போது ரயில் நிலையத்தில் சுமார் 100 பேர் இருந்தனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சம்பவம்தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.








# பிரேசில் விமான நிலையத்தில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி!

பிரேசிலின் மிகப்பெரிய விமான நிலையமான சாவோ பவுலோ சர்வதேச விமான நிலையத்தில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த விமான நிலையத்திற்கு காரில் வந்த சிலர், திடீரென விமான நிலையத்திற்குள் நுழைந்து சரமாரியாகத் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், 3 பேர் காயம் அடைந்துள் ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் அந்நாட்டுக் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.







# தென் கொரியாவில் மீன்பிடி படகு விபத்துக்குள்ளானதில் இருவர் பலி

தென் கொரியாவில் மீன்பிடி படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் 12 பேர் காணாமல் போயுள்ளனர் என கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென்கொரியாவின் ஜெஜு தீவிலிருந்து 24 கிலோ மீற்றர் தொலைவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி படகில் 16 தென்கொரியப் பிரஜைகளும் 11 வெளிநாட்டவர்களும் பயணித்துள்ளனர் என தெரிவிக் கப்படுகிறது.

இதனிடையே, மீட்புப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், காணாமல் போனவர்களைத் தேடும் பணியில் கடலோர காவல்படை, பொலிஸ், தீயணைப்பு படை மற்றும் இராணுவம் ஆகியவற்றின் 11 கப்பல்கள், 9 விமானங்கள் மற்றும் 13 கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




கனடா முரசு
பக்கங்கள் 02
சனிக்கிழமை 09/11/2024

## அடகு கடன் திருத்தம் தொடர்பில் மத்திய வங்கி அதிகாரி எச்சரிக்கை

கனடிய மத்திய வங்கியின் அதிகாரியொருவர் அடகு கடன் திருத்தம் தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கனடிய மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆணையாளர் கரோலின் ரொஜர்ஸ் இது 02▶





# கனடா – இந்தியா இடையிலான பிரச்சினையை தீர்க்க ட்ரம்ப் உதவுவார்

**கனடா இந்தியாவுக்கிடையிலான உறவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க அமெரிக்க ஜனாதிபதியாகிய ட்ரம்ப் உதவுவார் என இந்திய வம்சாவளி தலைவர் ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

**இந்திய அமெரிக்க சமுதாயத்தின் முன்னணி தலைவரான சுதிர் பாரிக் என்பவர், 2024ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றமை குறித்து கருத்து தெரிவிக்கும்போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

ட்ரம்புக்கு இந்திய அமெரிக்க சமுதாயத்தின் ஆதரவு குறித்து பேசிய சுதிர், கனடா இந்தியாவுக்கிடையிலான தூதரக உறவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க கனடா உதவ முடியும் என்பது குறித்தும் பேசியுள்ளார்.

சமீபத்தில் கனடாவில் இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து தாங்கள் ட்ரம்புடன் விவாதித்ததாகவும், தான் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்தெடுக்கப்பட்டால் கனடா அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்த்துவைக்க உதவுவதாக அவர் தெரிவித்ததாகவும் சுதிர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையில், வர்த்தகம், கலாச்சாரப் பரிமாற்றம், மாணவர் பரிமாற்றம், இரு நாடுகளிலும் மற்ற நாட்டவர்கள் வாழ்தல் என முக்கிய விடயங்கள் உள்ளன என்பதால், கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பிரச்சினைகள் தூதரக ரீதியில்தான் தீர்த்துவைக்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒன்றாரியோவில் பாடசாலைகளுக்கு அருகாமையில் போராட்டம் நடத்த தடை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் பாடசாலைகளுக்கு அருகாமையில் போராட்டங்களை நடத்துவதற்கு தடை விதிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டு தலங்களுக்கு அருகாமையில் போராட்டங்களை நடத்துவதற்கு தடை விதிக்கும் புதிய சட்டங்களை அறிமுகம்செய்யதிட்டமிடப்பட்டுள்ளது.

ஒன்றாரியோவின் நகர நிர்வாகங்கள் இது குறித்து கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பிரம்டனில் இந்து ஆலயம் ஒன்றிற்கு எதிரில் சீக்கியர்கள் போராட்டம் நடத்தி இருந்தனர்.

எனினும், இவ்வாறு போராட்டம் நடத்துவதற்கு தடை விதிப்பதானது அவர்களது கருத்து சுதந்திரத்தை முடக்கும் வகையிலானது என கல்வியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.



முதல்வர் பற்றிக் பிரவுன் இவ்வாறான தடை விதிப்பது தொடர்பிலான சட்டத்தை முன்மொழிய திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு சட்டத்தை உருவாக்குவது குறித்து நகர நிர்வாகம் ஆராய்ந்து வருவதாக பிரவுன் தெரிவித்துள்ளார்.







# கனடாவில் இந்துக்களுக்கு எதிராக தாக்குதல் சென்னை அண்ணா சாலையில் ஆர்ப்பாட்டம்

கனடாவில் இந்துக்கள் மற்றும் இந்து கோயில்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, சென்னை அண்ணா சாலையில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற இந்து மக்கள் கட்சியினரை பொலிஸார் கைது செய்தனர்.

கனடா நாட்டில் கோயில்கள் மீதும், இந்து பக்தர்கள் மீதும் காலிஸ்தான் தீவிரவாத குழுவினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து இந்து மக்கள் கட்சி சார்பில் அதன் தலைவர் அர்ஜூன் சம்பத் தலைமையில் சென்னை அண்ணா சாலை தாராப்பூர் டவர் எதிரில் நேற்று காலை ஆர்ப்பாட்டம் நடைபெற இருந்தது.

இதற்காக அர்ஜூன் சம்பத் தலைமையில், நிர்வாகிகள் குமரவேல், பாரதமாதா செந்தில் உள்ளிட்ட 15 இற்கும் மேற்பட்டோர் அங்கு வரத் தொடங்கினர். அப்போது, போலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தி, தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்ய இருந்ததாக கூறி கைது செய்து அருகில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் அடைத்தனர்.

இதுகுறித்து இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜூன் சம்பத் குறிப்பிடுகையில்,

“கனடா நாட்டில் இந்து பக்தர்கள் மீது காலிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி பெரும் துன்பத்தை ஏற்படுத்தி உள்ளனர். கனடா ஜனாதிபதி ஜஸ்டின் ட்ரூடோ தேர்தல் அரசியலுக்காக, அங்கு வாழும் 7 லட்சம் சீக்கியர்களின் ஓட்டுகளுக்காக காலிஸ்தான் பிரிவினைவாத செயல்களை தூண்டிவிடுகிறார். இந்துக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க தவறிவிட்டார். இது கண்டிக்கத்தக்கது. கனடாவில் வாழும் இந்துக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்,”- என்றார்.




# கனடாவில் பொலிஸ் உத்தியோகத்தரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் பலி

கனடாவின் ஒரிலியா பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நபர் ஒருவர் சொல்லப்பட்டுள்ளார்.

ஒன்றாறியோ மாகாணத்தில் ஒரிலியா பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 26 வயதான நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் விசேட விசாரணை பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மேற்படி நபரை கைது செய்ய முயற்சித்த போது அந்த நபர் பொலிஸ் உத்தியோகத்தர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதன் போது, பொலிஸ் உத்தியோகர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் சந்தேக நபர் காயமடைந்த நிலையில், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## அடகு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அடமான சந்தை தொடர்பில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அடமான சந்தையை மித மிஞ்சிய அளவில் திருத்தம் செய்வதன் மூலம் வீடு கொள்வனவு தொடர்பான பிரச்சனைக்கு தீர்வு காண்பது சாத்தியமில்லை என ரொஜர்ஸ் தெரிவித்துள்ளார்.

கேள்வி மற்றும் நிரம்பல் என்பன வற்றுக்கு இடையிலான சமநிலையின் அடிப்படையிலேயே வீடு கொள்வனவு இயலுமை தொடர்பான பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

வெறுமனே அடமான சந்தையை மட்டும் இலக்காக வைத்துக் கொண்டு மேற்கொள்ளப்படும் கொள்கை திருத்தங்கள் வெற்றி அளிக்குமா என்பது சந்தேகம் என அவர் தெரிவித்துள்ளார்.

குறுகிய கால அடிப்படையில் எடுக்கப்படும் சில தீர்மானங்கள் நீண்ட காலத்தில் பாதக விளைவுகளை ஏற்படுத்த கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.